பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

03 05 2025 **SATURDAY** **7.15 AM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா – அங்கோலா இடையே இருதரப்பு உறவுகள் மற்றும் வர்த்தகம் தொடர்பான பேச்சுவார்த்தை புதுதில்லியில் இன்று நடைபெறவுள்ளது.

2. வேவ்ஸ் உச்சிமாநாட்டில் இன்று சமுதாய வானொலி தொடர்பான தேசிய மாநாடு நடைபெறவுள்ளது.

3. இந்தியாவின் மொத்த ஏற்றுமதி கடந்த மார்ச் மாதத்துடன் முடிவடைந்த நிதியாண்டில் இதுவரை இல்லாத அளவிற்கு 824 புள்ளி ஒன்பது பில்லியன் டாலர்களை எட்டியுள்ளது.

4. உலக பத்திரிகை சுதந்திர தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில், சென்னை அணி இன்று பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

இந்தியா – அங்கோலா இடையே இருதரப்பு உறவுகள் மற்றும் வர்த்தகம் தொடர்பான பேச்சுவார்த்தை இன்று புதுதில்லியில் நடைபெறவுள்ளது.

இதில், பிரதமர் திரு நரேந்திர மோடி, அங்கோலா அதிபர் திரு **Joao Manuel Goncalves –** தலைமையில் இருநாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்கிறார்கள்.

இந்த பேச்சுக்களின் முடிவில், பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில் ஒப்பந்தங்களும் கையெழுத்தாகவுள்ளன.

அங்கோலா அதிபருடன், அந்நாட்டின் மூத்த அமைச்சர்கள், உயரதிகாரிகள், வணிக நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இந்தியாவுக்கு வந்துள்ளனர்.

இன்று குடியரசுத் தலைவர் மாளிகையில் அங்கோலா அதிபருக்கு பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.

அதிபரை வரவேற்று இன்றிரவு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விருந்தளிக்கவுள்ளார்.

<<<<<<>>>>>

தேசிய போதைப்பொருள் கட்டுப்பாட்டு அமைப்பு மேற்கொண்டுவரும் போதைப்பொருளுக்கு எதிரான நடவடிக்கைகளை உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா பாராட்டியுள்ளார்.

கடந்த நான்கு மாதங்களில் பஞ்சாப், ராஜஸ்தான் உள்ளிட்ட நான்கு மாநிலங்களில் அமிர்தசரஸ் மண்டல போதைப்பொருள் கட்டுப்பாட்டு அலுவலகம் 547 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப்பொருட்களை கைப்பற்றியதாக அவர் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக சமூக வலைதளத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனைக்கு எதிராக மத்திய அரசு கடும் நடவடிக்கை எடுத்து வருவதாகவும், போதையில்லாத பாரதத்தை உருவாக்க வேண்டும் என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் இது என்றும் திரு அமித் ஷா மேலும் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

இனி, வேவ்ஸ் உச்சிமாநாடு குறித்த செய்திகள்...

*(மியூசிக் - வேவ்ஸ் மாநாடு – 11 நொடிகள்)*

மும்பையில் நடைபெறும் வேவ்ஸ் உச்சிமாநாட்டின் மூன்றாவது நாளான இன்று சமுதாய வானொலி தொடர்பான தேசிய மாநாடு நடைபெறவுள்ளது.

சமீபத்திய போக்குகள், கொள்கைகள் மற்றும் திட்டங்கள், தனிநபர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையிலான நிகழ்ச்சி தயாரிப்புகள் ஆகியவை குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது.

உள்ளூர் சமூகத்துடன் நெருக்கமான தொடர்பை கொண்டுள்ள சமுதாய வானொலி நிலையங்கள் பின்பற்றி வரும் சிறந்த நடைமுறைகளை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வதை நோக்கமாக கொண்டு இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம், இந்திய மக்கள் தொடர்பு பயிற்சி நிலையத்துடன் இணைந்து இந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்துள்ளது.

“நேரடி ஒளிபரப்பு குறித்த துறையின் பொருளாதாரம்” என்ற தலைப்பில் வெள்ளை அறிக்கை ஒன்றை இந்த மாநாட்டில் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிடவுள்ளார்.

பொழுதுபோக்குத்துறையின் தற்போதைய நிலை, அதில் வருங்காலத்தில் ஏற்படக்கூடிய வளர்ச்சி, அந்த துறையை மேம்படுத்துவதற்கான உத்திசார் பரிந்துரைகள் ஆகியவற்றை கொண்டதாக இந்த அறிக்கை இருக்கும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்நிலையில், வேவ்ஸ் உச்சிமாநாடு குறித்து தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் உருவாக்கியுள்ள கையேடு இன்று மாநாட்டில் வெளியிடப்படுகிறது.

*(மியூசிக் - வேவ்ஸ் மாநாடு – 11 நொடிகள்)*

<<<<<<>>>>>

இந்தியாவின் மொத்த ஏற்றுமதி கடந்த மார்ச் மாதத்துடன் முடிவடைந்த நிதியாண்டில் இதுவரை இல்லாத அளவிற்கு 824 புள்ளி ஒன்பது பில்லியன் டாலர்களை எட்டியுள்ளது.

இதுதொடர்பாக, ரிசர்வ் வங்கி வெளியிட்ட சமீபத்திய தரவுகளில், சேவைத் தொடர்பான வர்த்தகமும் இதில் அடங்கும் என்று கூறியுள்ளது.

இதற்கு முந்தைய ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 778 புள்ளி ஒரு பில்லியன் டாலர்களைவிட தற்போது ஆறு புள்ளி ஒரு சதவீதம் அதிகரித்துள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஏற்றுமதி மிகப்பெரிய அளவில் வளர்ச்சியடைய சேவைத்துறை முக்கிய பங்கு வகித்துள்ளதாகவும், அத்துறையின் ஏற்றுமதி 13 புள்ளி ஆறு சதவீதம் அதிகரித்து, 387 புள்ளி ஐந்து பில்லியன் டாலர்களை எட்டியுள்ளதாகவும் ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

மார்ச் மாதத்தில் மட்டும் சேவைத்துறையின் ஏற்றுமதி ஆண்டுக்கு ஆண்டு 18 புள்ளி ஆறு சதவீதம் அதிகரித்து, 35 புள்ளி ஆறு பில்லியன் டாலர்களை எட்டியுள்ளது என்றும், பொருட்கள் ஏற்றுமதி 437 புள்ளி நான்கு பில்லியன் டாலர்களை எட்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

உலக பத்திரிகை சுதந்திர தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

பத்திரிகை சுதந்திரத்தை அனைத்து நாடுகளில் உள்ள அரசுகளும் மதித்து செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் ஆண்டுதோறும் இந்நாள் பத்திரிகை சுதந்திர தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

செயற்கை நுண்ணறிவு காரணமாக பத்திரிகை சுதந்திரத்திற்கு ஏற்பட்டுள்ள சவால் குறித்தும் இந்நாளில் விவாதிக்கப்படவுள்ளது.

தகவல்கள் சுதந்திரமாக கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று உலகம் முழுவதும் பத்திரிகையாளர்கள் வலியுறுத்தி வருகிறார்கள்.

உண்மையை கண்டறிய தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் பணியாற்றிவரும் பத்திரிகையாளர்கள் இந்நாளில் கௌரவிக்கப்பட உள்ளனர்.

<<<<<<>>>>>

அஸ்ஸாம் மாநிலத்தில் நேற்று நடைபெற்ற முதல்கட்ட பஞ்சாயத்துத் தேர்தலில் 56 புள்ளி நான்கு ஒன்று சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

14 மாவட்டங்களில் தேர்தல் அமைதியாக நடைபெற்று முடிந்ததாக மாநில தேர்தல் அதிகாரி தெரிவித்தார்.

**Tinsukia,** திப்ருகர், சிவசாகர், ஜோர்ஹாட் உள்ளிட்ட மாவட்டங்களில் முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெற்றது.

இரண்டாவது கட்டமாக துப்ரி, காம்ரு உள்ளிட்ட 13 மாவட்டங்களில் இம்மாதம் 7-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இந்த இரண்டு கட்டங்களில் பதிவாகும் வாக்குகள் இம்மாதம் 11-ஆம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்படும் என்று மாநில தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

<<<<<<>>>>>

ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நாடு முழுவதும் இரண்டு வாரங்கள் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழகத்தின் நீலகிரி மாவட்டம் உதகை அருகே உள்ள எமரால்டு பகுதியில் உள்ளூர் வளங்களை பயன்படுத்தி பாரம்பரிய உணவுகளை தயாரிப்பது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி அங்கன்வாடி பணியாளர்களுக்கு நடத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - சரவணன் - 53 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

தேசிய அளவிலான முதலாவது சமரச மாநாட்டை புதுதில்லியில் இன்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தொடங்கிவைக்கிறார்.

மத்திய சட்ட அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சஞ்ஜீவ் கண்ணா உள்ளிட்டோர் இந்த மாநாட்டில் உரையாற்றவுள்ளனர்.

மத்திய சட்ட அமைச்சகமும், இந்திய தலைமை வழக்கறிஞர் அலுவலகமும் இணைந்து இந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்துள்ளன.

சமரச விவகாரங்களில் சர்வதேச அளவில் மேற்கொள்ளப்படும் சிறந்த நடைமுறைகளை பகிர்ந்துகொள்ளவும், விவாதிக்கவும் இந்த மாநாடு பயன்படும் என்று புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அரசு தலைமை வழக்கறிஞர் திரு ஆர் வெங்கடரமணி தெரிவித்தார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில், சென்னை அணி இன்று பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

முன்னதாக, நேற்று அகமதாபாதில் நடைபெற்ற ஆட்டத்தில், குஜராத் அணி 38 ரன் வித்தியாசத்தில், ஹைதராபாத் அணியை வென்றது.

முதலில் விளையாடிய குஜராத் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில், 6 விக்கெட் இழப்பிற்கு, 224 ரன் எடுத்தது.

225 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன், பின்னர் விளையாடிய ஹைதராபாத் அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு, 186 ரன் மட்டுமே எடுத்தது.

<<<<<<>>>>>

ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய மகளிர் ஹாக்கி அணியினர் இன்று மீண்டும் ஆஸ்திரேலியா அணியுடன் விளையாடவுள்ளனர்.

இந்த போட்டி பெர்த் நகரில் உள்ள ஹாக்கி விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

<<<<<<END>>>>>